**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ)செயல்முறைகள்**
**ந.க.எண்.0267/அ1/2025, நாள். .06.2025.**

---

**பொருள் :** தமிழ்நாடு அமைச்சுப்பணி – பயிற்சி – பவானிசாகர், அரசு அலுவலகர் பயிற்சி நிலையம் மூலம் இளநிலை உதவியாளர்/ உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி நடத்துதல் – 30.06.2025 நிலவரப்படி பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்களின் விவரம் அனுப்பக் கோருதல் – சார்பு.

**பார்வை :** சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.38833/அ4/இ4/2025, நாள்.23.06.2025.

-----

வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆளுகையின் கீழ் செயல்படும் அலுவலகம்/ பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களில் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம் மூலம் இளநிலை உதவியாளர்/ உதவியாளர்களுக்கு 30.06.2025 நிலவரப்படி அடிப்படைப் பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்களின் விவரம் அனுப்ப பார்வையில் காணும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளதால் காலதாமதமின்றி 25.06.2025 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் இணைக்கப்பட்டுள்ள கூகுள் படிவத்தில் பூர்த்தி செய்யுமாறு அனைத்து அரசு / நகராட்சி உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்கோரிய விவரங்களை உரிய படிவத்தில் தயார் செய்து இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி அதன் நகலினை நேரில் ஒப்படைக்க வேலூர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி , மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்) மற்றும் உடற்கல்வி ஆய்வாளர் கேட்டுக கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் பொருள் சார்பாக பணியாளர்கள் எவரும் இல்லையெனில், தவறாமல் இன்மை அறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

படிவம். **// ஒப்பம் //**

**முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),**
**வேலூர்.**

**பெறுநர் :**

1. வேலூர், கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்), வேலூர் மாவட்டம்.
3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர்.
4. அனைத்து அரசு / நகராட்சி உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல் :**

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. கோப்பிற்கு.